V.—REVISED BUDGET FOR 1962-63—GENERAL DISCUSSION.

*திரு. மு. கருணாநிதி: கனம் அவைத் தலைவர் அவர்களே 1962-63 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தின் முன் வைத்து அது இப் பொழுது விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் என்னுடைய கருத்துக்களை அதன் மீது கூற விரும்புகிறேன். வழக்கம் போல புள்ளி விவரங்களை அள்ளிக் கொட்டி இந்த அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். இப்பொழுது தரப்பட்டிருக்கிற புள்ளி விவரங்கள் வழக்கம்போலவே ஒன்றுக்கு ஒன்று முரண்பாடு கொண்டதாகவே இருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் இரசாயன உரம் போதிய அளவுக்குக் கிட்டாத நிலையிலும் 9 லட்சம் டன் உணவு தானியங்கள் அதிகமாக உற்பத்தி செய்ய முடிந்தது என்ற நிலைமையில் நமது புதிய நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் இதே மன்றத்தில் இதற்கு முன் வேறு விதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பழைய நிதி அமைச்சர் அவர்கள் 1961-62 ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தை சமர்ப்பிக்கும்போது இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் சுமார் ஏழு அல்லது எட்டு லட்சம் டன் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டது என்று குறிப்பிட்டிருக்கிறார். இடைக்காலத்தில் ஒன்று அல்லது இரண்டு லட்சம் டன்கள் அதிகமாக நிதிநிலை அறிக்கையில் எப்படி புகுந்தது என்பது எனக்குப் புரியவில்லை. இப்படிப்பட்ட முரண்பாடான புள்ளி விவரங்களை, மக்களைக் கவரும்படியான அதிகமான புள்ளி விவரங்களை தொகுத்து இருக்கிற நிலைமையில் இந்த அறிக்கை இருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மூன்றாவது ஐந்தாண்டு திட்ட இறுதிக்குள் உணவு தானியங்களை 17 லட்சம் டன் அதிகமாக உற்பத்தி செய்யவேண்டும் என்றும் சொல்லப்படுகிறது. பழைய லட்சிய அளவைப் பார்க்கும்போது இரண்டாவது மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் 12.79 லட்சம் டன் அதிகமாக உற்பத்தி செய்யப்படும் என்று சொல்லப் பட்டது. அப்படி உற்பத்தியாகி இருக்கவேண்டும். ஆனால் அந்த 12.79 லட்சம் டன் உணவு அதிகமாக உற்பத்தி செய்யப்படவில்லை. நான் முன்பே முரண்பாடுள்ள இரண்டு புள்ளிவிவரங்களைக் காட்டினேனே அந்தளவில்தான் உணவு உற்பத்தி அதிகப்படுத்தப் பட்டிருக்கிறது. இந்தளவு லட்சியங்கள் ஈடேறுகிற நேரத்தில், நிதியமைச்சர் அவர்கள் தந்திருக்கிற, 17 லட்சம் டன் உணவு உற்பத்தி அதிகமாகும் என்ற லட்சிய அளவை எந்த அடிப் படையில் நாம் உறுதியாக நம்புவது என்று புரியவில்லை. உரம் போதிய அளவு கிடைக்காத காரணத்தினால்தான் இரண்டாவது திட்ட காலத்தில் நமது லட்சிய அளவை நாம் அடைய முடிய வில்லை என்று நமது பழைய நிதியமைச்சர் அவர்கள் காரணம் காட்டினார்கள். இப்பொழுது உரம் அதிகமாகக் கிடைப்பதற்கு என்னென்ன நம்பிக்கை ஊட்டப்படுகிறதென்று நான் அறிய

2nd July 1962] [திரு. மு. கருணாநிதி]

விரும்புகிறேன். 1956-57-ல் சல்பேட் உரம் 1.2 லட்சம் டன் என்ற அளவில் வழங்கப்பட்டு அதற்குப் பிறகு நான்காண்டுக் கணக்கில் 1960-61 முடியப்போகிற நேரத்தில் 1.3 லட்சம் டன்தான் வழங்க முடிந்தது என்றால் எந்தளவு அது அதிகமாக ஆகியிருக்கிறது? நெய்வேலியில் தயாரிக்கப்படயிருக்கிற ஊத்தையும், மற்ற வகைகளில் தயாரிக்கப்படும் ஊத்தையும் பற்றிச் சொல்லப்படுகிறது. மூன்றாவது திட்ட கால முடிவிற்குள் பாசன வசதி நிலங்களுக்கு 4 லட்சம் டன் அம்மோனியம் சல்பேட் உரம் தேவை என்று சென்ற வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தக் கணக்குகளை வைத்துப்பார்க்கும்போது ஊத்தைப் பொறுத்த வரையில், 17 லட்சம் டன் உணவு உற்பத்தியை அதிகமாக்குவதற்கு முயற்சிகள் போதுமானதாகயிருக்கிறதா என்று யோசித்துப் பார்க்கவேண்டும். அடுத்து உணவு உற்பத்திக்கு இன்றியமையாததாக இருப்பது விதைப் பண்ணைகள். 1959-60-க்குள் 360 விதைப் பண்ணைகள் ஏற்படுத்தப்படவேண்டுமென்று 1958-59 வரவு செலவுத் திட்ட அறிக்கையில் சொல்லப்பட்டது. அப்படி 360 விதைப்பண்ணைகளுக்கு திட்டமிட்டு, இப்போது 130 பண்ணைகள் தான் நிறுவ முடிந்தது என்று கணக்கு காட்டப்பட்டு, அதைப் பெருக்குவதற்குப் பதிலாக ஏற்கனவே ஆரம்பித்த பண்ணைகள் திறமையாக நடந்தால் உணவு உற்பத்திக்கு போதும் என்றளவில் 1959-60-ல் வலியுறுத்திக் கூறப்பட்டது. 136 விதைப்பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று கூறியுள்ளார்கள். 210 விதைப் பண்ணைகள் நமக்கு வேண்டுமென்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது. இன்றையதினம் அளிக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கை மூலம் பழைய முடிவை மறுத்திருக்கிறார்களா? அல்லது 210 விதைப் பண்ணைகள் நமக்குத் தேவை என்ற லட்சிய அளவை அடைய என்ன என்ன முயற்சிகள் எடுக்கப்போகிறார்கள் என்பதைப்பற்றி இந்த அறிக்கையில் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. ஊத்தைப் பொறுத்தவரையில் நல்லதொரு முன்னேற்றம் இல்லாத வகையில், நம்பிக்கை ஊட்டத்தக்க வகையில் ஒன்றுமே காட்டப்படாத அளவில், 360 பண்ணைகளுக்கு திட்டமிட்டு 136 தான் நிறுவ முடிந்தது என்று கூறி, இதுவே போதும் என்ற அளவில் குறிப்பிடப்பட்டு, அதனால் திருப்தி அடைந்து, 210 பண்ணைகள் இருந்தால் நல்லபடி உற்பத்தியைப்பெருக்க முடியும் என்று குறிப்பிட்டு 136 தான் இருக்கிறது என்று கூறி, 210 பண்ணைகள் நிறுவ வழி எதுவும் கூறாதிருக்கிற நிலையில் லட்சிய அளவை, 17 லட்சம் டன் உணவு உற்பத்தியை எப்படி அதிகப்படுத்தப் போகிறார்கள் என்ற சந்தேகத்தை நான் மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

தொழில்துறையைப் பொறுத்தவரையில் நமது நிதியமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தொழில் வளர்ச்சியில் நமது மாநிலம் பின்தங்கிவிடவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நமக்கெல்லாம் தெரியாததொரு புதுமையை சர்க்காரை நடத்துகிற நிதியமைச்சர் அவர்கள் இன்றைய தினம் எடுத்துக்கூறுகிறார்கள். இடறி விழுந்தால் தொழிற்சாலையில் விழவேண்டும், தடுக்கி விழுந்தால் தொழிற்சாலையில் விழவேண்டும்

[திரு. மு. கருணாநிதி] [2nd July 1962

என்று தமிழகத்தில் எங்கு பார்த்தாலும் தொழிற்சாலைகள் இருப்பதைப்போன்று, இதை நீங்கள் யாருமே பார்க்கவில்லையா என்பதுபோல தொழில் துறையில் நமது மாநிலம் பின்தங்கிக் கிடக்கவில்லை என்ற மாபெரும் உண்மையை நமக்கு எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். தொழில்வளர்ச்சியைப் பொறுத்தவரையில், இரண்டாவது ஐந்தாண்டுத்திட்ட வரவேட்டிலும், மூன்றாவது ஐந்தாண்டுத்திட்ட வரவேட்டிலும், நமது மாநிலம் தொழில் துறையில் பின்தங்கிக்கிடக்கிறது என்று குறிப்பிட்டிருக்க, கோரிய 399 கோடியை வட நாட்டு சர்க்கார் மறுத்து 290 கோடியே தரப் பட்டு இருக்கும்போது திடீரென தமிழகம் தொழில் வளர்ச்சியில் முன்னேறியிருக்கிறது, அல்லது மற்ற மாநிலங்களை விட நமது மாநிலம் தொழில் துறையில் பின்தங்கிவிடவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறுவதை என்னால் புரிந்துகொள்ள முடிய வில்லை. இப்படியெல்லாம் மக்களை ஏமாற்றத்திற்கு ஆளாக்கா தீர்கள் என்று நான் நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்திருக்கும் நிதியமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். திரும்பத் திரும்ப நெய்வேலித் திட்டத்தைப்பற்றி கீறல் விழுந்த கிராமபோன் பிளேட்டைப்போல் இந்த மன்றத்தில் அடிக்கடி எடுத்துச் சொல்லப்படுகிறது, "நெய்வேலித் திட்டம், நெய்வேலித் திட்டம்." என்று! மற்ற தொழில்களைப் பொறுத்தமட்டில், பூர்வாங்க ஆலோசனையில் இருக்கிறது, ஆராய்ச்சி நடக்கிறது, இடம் பார்த் தாகிவிட்டது, நிலம் வாங்கியாகிவிட்டது என்ற கட்டங்களில் இருக்க, இந்த மாநிலத்தில் தொழில்வளம் அதிகரித்திருக்கிறது. அல்லது மற்ற மாநிலங்களோடு போட்டியிட்டுக் காட்டும் அளவிற்கு எந்த தொழில்வளர்ச்சியை நிதியமைச்சர் அவர்கள் காட்டு கிறார்கள் என்று தெரியவில்லை. பெரும்பாலான தொழிற்சாலைகள் யார், யாருக்கு விடப்பட்டிருக்கின்றன? மறுபடியும், மறுபடியும் தனியார் துறைக்குத்தான் விடப்பட்டிருக்கின்றன, விடப்பட்டு வருகின்றன. இரண்டாவது திட்டகாலத்தில் நமது மாநிலத்தில் தொழில் நடத்த பதிவு செய்யப்பட்ட கம்பனிகள் 908. அதில் பப்ளிக் லிமிடெட் 66, பிரைவேட் லிமிடெட் 842. அடுத்து ரசாயன உற்பத்தியில் நாம் வெகுவாக முன்னேறியிருக்கிறோம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நாம் என்பது யார்? நாம் என்று கூறும்போது சர்க்காரைத்தான் குறிப்பிடுகிறார்கள் என்று எண்ணினேன். ஆனால் அப்படி குறிப்பிட்டிருப்பது யாரை என்று பார்த்தால், தாரங்கதாரா, இந்தியா சிமெண்ட் போன்ற ஸ்தாபனத் தாரைத்தான் அப்படி குறிப்பிட்டிருக்கிறார்கள். தனியார் துறை முன்னேற்றத்தைத்தான், நாம் முன்னேறியிருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் அமைச்சர் அவர்கள். இந்த நாம், தாரங்கதாரா, விஸ்கோஸ், சேஷசாயி, மதறாஸ் அலுமினியம் கம்பெனி, பாரி கம்பனி இவைகளைப் பிரதிபலிக்கிற நாமாக இருப்பதால்தான், "நாம் இந்த ஆட்சியில் சுகம் காண முடியாது, நாம் இங்கிருந்தால் வாழ முடியாது; ஆகவே கப்பல் ஏறுவோம்" என்று கப்பல் ஏறி, கொடுமைகள் பல அனுபவித்து வருகிறார்கள் ஏழை மக்கள். அந்த நாம் என்ற வார்த்தையின் பிரதிநிதிகள் ஏழை மக்களை வாழ்விக்கும் நிலையில் தொழில் திட்டங்களை

2nd July 1962] [திரு. மு. கருணாநிதி]

வருக்கவில்லை என்பதை ஒரு குற்றச்சாட்டாக இம்மன்றத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். தனியார் துறையை ஏன் வளர்க்கவேண்டும் அதற்குள்ள காரணங்கள் என்ன? என் இப்படி பொதுத் துறையையும் தனியார் துறையையும் கதம்பம் மாதிரி கலக்கிற பொருளாதாரத் திட்டத்தை இந்த அரசினர் மேலும் மேலும் வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்குள்ள காரணங்களை இந்த அமைச்சரவையிடம் எதிர்பார்க்கிறேன். தனியார் துறையினர் அடிக்கும் கொள்ளை லாபம் தடுக்கப்பட்டு அரசினர் அதை ஏற்று நடத்தினால் மேலும் மேலும் வரிகளைப் போட்டு மக்களை வாட்ட வேண்டிய அவசியம் இல்லை என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த ஆண்டு 7 கோடி ரூபாய்க்கு வரி போடப்பட்டிருக்கிறது. அப்படி 7 கோடி ரூபாய்க்கு வரி போடப் படும் என்று முதலமைச்சர் அவர்கள் அநேகமாக வரி போடு வதற்கு முன்னரே, இம்மன்றத்தில் இப்பேச்சு வருவதற்கு முன்னதாகவே வரி வருகிறது வரி வருகிறது என்று பொது மக்களிடம் எடுத்துச் சொல்லி அவர்களை ஓரளவு தைரியப்படுத்தி விட்டு . . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் முதலமைச்சர் அவர்கள் 7 கோடி என்ன சொல்லவில்லை, வரி கூடாதென்று பல கனம் அங்கத்தினர்கள் இந்த மன்றத்தில் சொன்னதற்கு முதலமைச்சர் அவர்கள் "வரி போட்டால் என்ன தப்பு" என்று சொன்னார்கள்.

**திரு. மு. கருணாநிதி:** கனம் முதலமைச்சர் அவர்கள் ஏழு கோடி என்று சொல்லாவிட்டாலும் தேர்தல் நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் வெளியிட்ட சுவரொட்டிகளில் 7 கோடி ரூபாய்க்கு வரி போடுவார்கள் என்று உணர்ந்து நாட்டு மக்களை எச்சரித்திருக்கிறோம். ஆனால் நாட்டு மக்கள் அதைக் கேட்காத தினால் நீங்கள் 139 அங்கத்தினர்கள் என்றும் நாங்கள் 50 அங்கத் தினர்கள் என்றும் வர நேரிட்டது. தேர்தல் வரை ஒன்று சொல்லிக் கொண்டிருப்பார்கள், பின்னர் தேர்தலில் வோட்டு அளித்ததற்கு நன்றியாக வரிகளை போடுவார்கள் என்பதை இந்நாட்டு வாக்காளப் பெருமக்கள் இனிமேலாவது உணருவார்கள் என்று நம்புகிறேன். இன்று ஏழு கோடி ரூபாய்க்கு வரி போடப் பட்டிருக்கிறது. அபிவிருத்தி திட்டங்களை மனதிற்கொண்டு பார்க்கும்போது வரி போடும் முயற்சியை தடுக்க முடியாதென்று நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். 1962-63-க்கான இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை இம்மன்றத்தில் சமர்ப் பித்தது எல்லோருக்கும் தெரியும். அதில் பழைய நிதியமைச்சர் அவர்கள் என்ன குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றால், வரவு 92.71 லட்சம், செலவு 99.67 லட்சம்; துண்டு விழுவது 7 கோடி என்று குறிப்பிட்டார்கள். அதோடு, திருத்தப்பட்டு மதிப்பீடு மறுபடியும் வரலாம் என்று சூசகமாக வெளியிட்டார்கள். இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் ஏழு கோடி ரூபாய் துண்டு விழுகிறது என்று சொல்லிவிட்டு, தேர்தலுக்கு முன்பு அந்த பட்ஜெட் இங்கே சமர்ப்பிக்கப்பட்ட காரணத்தால், இந்த ஏழு கோடி ரூபாயை எப்படி நாம் நிறைவு செய்யப்போகிறோம் என்பதற்கான வழிவகை

சொல்லாமல் இப்பொழுது வேறு காரணங்கள் சொல்லப்படுவது ஏன் என்பதை அமைச்சர் அவர்களே இந்த மன்றத்தில் ஆராய்ந்து பார்த்துக்கூறும்படி நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அப்பொழுது ஏழு கோடி ரூபாய் எப்படிச் சரிக்கட்டப்படும் என்று பழைய நிதி அமைச்சர் சொன்னார்?

". . . பொதுவாக மத்திய அரசின் வரி இனங்களின் வருமானம் வளர்ச்சியுற்று வருகின்றது. அதிலும் குறிப்பாக பொருள்களின் மேல் விதிக்கப்பட்டுள்ள வரிகள் மூலமாகக் கிடைக்கும் வருமானம் கணிசமாக உயர்ந்து வருகிறது. ஆகவே, நம் மாநிலத்திற்கு இந்த வரி இனங்களிலிருந்து கிடைக்கக்கூடிய பங்கு கணிசமாக உயர ஏது உண்டு. இது மக்கு ஓரளவு நம்பிக்கை அளிக்கக் கூடியதாக இருக்கிறது. மேலும், மாநிலங்கட்கு மத்திய வருமானத்திலிருந்து கொடுக்கப்படும் பங்கைப்பற்றி மூன்ருவது நிதிக் கமிஷன் தற்போது ஆராய்ந்து வருகிறது. மாநில வரிகளில் பெரும் பாலானவை போதுமான அளவிற்கு விரிந்து கொடுப்பன அல்ல என்பதைப் பற்றியும், மக்களின் அடிப்படையான தேவைகளைப் பூர்த்தி செய்வதில் மாநில அரசாங்கங்கள் மேலும் மேலும் அதிகப் படியான பொறுப்புகளை ஏற்கவேண்டியிருக்கிறது என்பது பற்றியும் நிதிக் கமிஷனுக்கு எடுத்து விளக்கியுள்ளோம். விரைவில் சமர்ப்பிக்கவுள்ள நிதிக் கமிஷனின் அறிக்கை தக்க முறையில் மாநிலங்கட்கு நீதி வழங்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது . . ."

என்று இந்த மன்றத்திலே இடைக்கால வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டபோது கூறப்பட்டது.

அந்த வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்துப் பேசிய ஆளும் கட்சியில் உள்ளவர்கள், 'ஏழு கோடி ரூபாய் துண்டு விழுந்தும் வரி போடாத அரசு அல்லவா அரசு' என்று பாராட்டினார்கள். அந்தக் காரணங்களெல்லாம் இப்பொழுது எங்கே போயின? 'ஏழு கோடி ரூபாய் துண்டு விழுந்தாலும் பயப்படமாட்டோம், வரி போடுவோம்' என்று அப்பொழுது சொன்னால், எங்கே தேர்தலில் வோட்டுப் போடாமல் இருந்துவிடுவார்களோ என்பதற் காக அப்பொழுது ஒன்றும் சொல்லாமல், தேர்தலில் வெற்றி பெற்று அமைச்சர்கள் ஆளும் கட்சியினராக வந்த பிறகு வரி போடுகிறார்கள் என்பது தவிர வேறு அர்த்தம் என்ன? அப்பொழுது நிதி அமைச்சர் தந்த வாக்குறுதி என்ன ஆயிற்று? நிதிக்கமிஷன் நீதி வழங்கவில்லையா? இதற்கான பதிலை கனம் அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் தருவார் என்று நான் கருதுகிறேன்.

1961-62-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கும் நேரத்தில் பழைய நிதி அமைச்சர், "ஜனநாயக அடிப்படையில் இயங்கும் நாட்டில் வரி மூலம் நிதி திரட்டுவதற்கு ஓர் எல்லையுண்டு" என்று தமது உரையில் குறிப்பிட்டிருக்கிறார். 'பழைய நிதி அமைச்சர்' என்று நான் குறிப்பிடுகிறபோது, புதிய நிதியமைச்சர், 'அது வேறு, இது வேறு, என்கிற அந்தப்

2nd July 1962] [திரு. மு. கருணாநிதி]

பிரச்சினைக்கு வரமாட்டார் என்று கருதுகிறேன். 'திட்டங்கள் நிறைவேற வேண்டுமானால், நிலையான சர்க்கார் இருக்கவேண்டும்' என்று இந்த அமைச்சர்கள் அடிக்கடி கூறி வருகிறார்கள். ஆகவே, நிலையான சர்க்கார் இருக்கவேண்டும் என்ற அவர்களுடைய கொள்கையின் அடிப்படையிலேயே, பழைய நிதி அமைச்சர், புதிய நிதி அமைச்சர் என்று குறிப்பிட்டாலும், இருவரும் ஒரு ஆளும் கட்சியின் சர்க்காரைச் சார்ந்தவர்களாதலால், ஒரே கொள்கை பிரதிபலிக்கும் என்ற அளவிலேதான் நான் குறிப்பிடுகிறேன். 'ஜன நாயக அடிப்படையில் இயங்கும் நாட்டில் வரி மூலம் நிதி திரட்டு வதற்கு ஓர் எல்லையுண்டு' என்று குறிப்பிட்ட அந்த வாசகம் இந்த நிதி நிலை அறிக்கையில் எங்கே போயிற்று? மைசூர் மாநில நிதி அமைச்சர் இரண்டு நாட்களுக்கு முன்பு என்ன பேசியிருக் கிறார்? '42 கோடி ரூபாய் அளவிற்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே நாம் வரி போடவேண்டும் என்று இருக்கிறது; போடுவதற்கு சாத்தியம் இல்லை; 20 கோடி ரூபாய் அளவிற்குத் தான் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் போட முடியும்; துண்டு விழும் தொகையை திட்டக் கமிஷன் தந்தாகவேண்டும்' என்ற வேண்டுகோளை மைசூர் அரசாங்கம் வடக்கே இருக்கும் திட்டக் குழுவிற்கு விடுத்திருக்கிறது. அதுபோல நம்முடைய நிதி அமைச்சர் அவர்களும் தைரியமாக இதை ஏன் சொல்லக் கூடாது? நம்முடைய நிதி அமைச்சர் தைரியம் இல்லாதவரா? சென்ற தடவை போலீஸ் அமைச்சராக இருந்தவர்தானே. ஆகவே, தைரியத்தை வரவழைத்துக்கொண்டு நிச்சயமாக திட்டக் குழுவினிடம் அவர் போராடவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

இப்பொழுது ஒன்பது கோடி ரூபாய்க்குமேல் துண்டு விழுவதைச் சரிக்கட்டுவதற்காகப் போடப்படுகிற வரிகளைக் குறித்து, இன்றையதினம் மேலெழுந்தவாரியாக யாருக்கோ போடப்பட்ட வரி என்று சொல்லிவிடலாம். இதனால் பெரும் பாலும் பொது மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை நான் இங்கே கூற விரும்புகிறேன்.

பஸ்களுக்கு வரி அதிகமாக்கப்பட்டிருக்கிறது. கால் ஆண்டுக்கு ஐந்து ரூபாய், பத்து ரூபாய், பதினைந்து ரூபாய் என்ற விகிதங் களில் வரி அதிகமாக்கப்பட்டிருக்கிறது. பஸ்களுக்குப் போடப் பட்டிருக்கிற இந்த வரியை திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கவில்லை. ஆனால், அப்படிப் போடப்பட்டிருக்கிற வரி யாருடைய தலையிலே சுமத்தப்படுகிறது என்பதை ஆராய வேண்டும். இது பிரயாணிகளுடைய தலையிலே பஸ் கட்டணம் மூலமாகச் சுமத்தப்படும் என்பதைக் குறித்து அறிக்கை களெல்லாம் பிரபல பஸ் முதலாளிகள் பத்திரிகைகளில் அழகாக வெளியிட்டு விட்டார்கள். 'பஸ் கட்டணத்தை உயர்த்த இருக்கிறோம்' என்று அவர்கள் அறிக்கை வெளியிட்டுவிட்டார்கள். பஸ் கட்டணம் உயர்ந்த பட்சம் 7½ பைசா என்று இருந்தாலும், இன்றைக்கு நான்கு பைசாவிலிருந்து ஆறு பைசா அளவிலேதான் கட்டணம் விதிக்கப்படுகிறது. இந்த வரி வந்த பிறகு,

[திரு. மு. கருணாநிதி] [2nd July 1962

அவர்களுக்கு இருக்கும் சட்டத்தைப் பயன்படுத்திக்கொண்டு, ஏழு, ஏழரை பைசா வரையிலும் கட்டணத்தை வசூலிக்க முற்படுவார்களானால், இந்த வரி மூலமாகப் பாதிக்கப்படுகிறவர்கள் பெரும்பாலும் ஏழைகள், பாட்டாளிப் பொது மக்கள் என்பதை நான் இங்கே உணர்த்த விரும்புகிறேன். ஆகவே, இந்த வரியைப் போடுகின்ற இதே நேரத்தில், 'கட்டணம் நிச்சயமாக உயர்ந்துவிடாது என்பதற்கு சர்க்கார் தகுந்த பாதுகாப்பு அளிக்கும்' என்று அமைச்சர் அவர்கள் இங்கே உறுதிமொழி அளிக்க வேண்டும். சட்டத்தைத் திருத்தி ஐந்து அல்லது ஆறு பைசா அளவிலேதான் கட்டணம் இருக்கவேண்டும் என்று இந்தச் சர்க்கார் இதற்கான சட்டத்தை மாற்றியமைக்கவேண்டும். அப்படிப்பட்ட உறுதிமொழியைத் தந்துவிட்டு, இந்த வரியைப் போட்டால் தான் பொதுமக்கள் பாதுகாக்கப்படுவார்கள்; இல்லாவிட்டால், 'அடிப்பது போல் அடிக்கிறேன், நீ அழுவது போல் அழு' என்று பஸ் முதலாளிகளைப் பார்த்துச் சொல்வதாகத்தான் இருக்கும். பஸ் தொழிலைத் தேசியமயமாக்கவேண்டும் என்ற கோரிக்கையைப் புறக்கணித்துவிட்டு இன்றையதினம் பஸ்ஸுக்கு வரி போடுவது எப்படியிருக்கிறது என்றால், 'தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிக்கும் கதை' யாகத்தான் இருக்கிறது. பஸ் தொழில் தேசியமயமாக்கப்படுமானால் வரியை விட அதன் மூலம் அதிகமான வருமானம் நிச்சயமாக வரும் என்பதை நான் இந்த சர்க்காருக்குச் சுட்டிக் காட்டுகிறேன்.

லாரிகளைப் பொறுத்தவரையில், சிறிய லாரிக்காரர்கள் பஸ் முதலாளிகள் பெருகிற அந்த அளவுக்கு லாபம் சம்பாதிக்கவில்லை. அவர்களுக்கு வரி போடுவதைப்பற்றிச் சிந்திக்கவேண்டும். பத்து, இருபது லாரிகள் வைத்திருப்பவர்கள் இந்த வரியினால் பாதிக்கப் படமாட்டார்கள் என்றாலும், ஒரு லாரி, இரண்டு லாரிகள் வைத்துக்கொண்டு பிழைப்பு நடத்திக்கொண்டிருப்பவர்கள் நிச்சயமாக பாதிக்கப்படுவார்கள். அதை இந்த அமைச்சரவை ஆழ்ந்து சிந்திக்கவேண்டும். லாரிகளுக்கு வரி போடும் காரணத்தால் ஏழை மக்கள் பாதிக்கப்படுவார்கள். உணவுப் பண்டங்களின் விலை ஏற்றத்திற்கு அது காரணமாகும். இவைகளை இந்தச் சர்க்கார் யோசிக்க வேண்டும்.

மின்சார உபயோகத்தின் மீது வரி விதிப்பதைப் பொறுத்த வரையிலும், 'லோ டென்ஷன்' மின்சாரம் விவசாயத்திற்குப் பயன்படுகிறது. அதற்கு வரியிலிருந்து விலக்கு தேவை. வீடுகளைப் பொறுத்த வரையில், ஆடம்பரமான விளக்குகள், வர்ண விளக்குகள், வாழைத் தண்டு விளக்குகள் முதலியவற்றைப் போட்டிருந்தால், அதற்கு மின்சார வரி இருக்கலாம். ஆனால், 15 வாட்ஸ், 25 வாட்ஸ் என்ற அளவில் மின்மினிப்பூச்சி போல் விளக்கு வைத்துக்கொண்டிருக்கிற, சாதாரண நடுத்தரக் குடும்பங்களுள்ள அந்த வீடுகளுக்கு விலக்கு அளிக்கப்பட வழிவகை காணவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நில வரியைப் பொறுத்தவரையில். குறிப்பிட விரும்புகிறேன். சென்ற முப்பது ஆண்டுகளிலே நிலங்களினுடைய தரம் பல நிலைமைகளாக மாற்றப்பட்டிருக்கிறது. மானாவாரிப் பாசனமாக

2nd July 1962] [திரு. மு. கருணாநிதி]

இருந்தது வளமான பாசனமாக மாறியிருக்கிறது; வளமாக இருந்தது வானம் பார்க்கின்ற சீமையாக இருக்கிறது. முப்பது ஆண்டுகளில் ஏற்பட்ட மாற்றங்கள், புதிய நிலைமைகள், இவைகளை கவனித்து, நிலங்களின் தரம் சரியானபடி வகுக்கப்பட குழு ஒன்று அமைக்கப்படவேண்டும். அப்படி அமைக்கப்படுகிற குழு, தற்போது இருக்கிற நில வரி விகிதத்திலே மாறுதல் செய்யலாம். இப்பொழுது புதிதாக விதிக்கப்படுகிற நில வரியைக் கைவிட வேண்டும். அந்தக் குழு அமைக்கப்பட்ட பிறகு, நில வரி மாறுதலைக் கவனிக்கலாம்.

குதிரைப் பந்தய வரி விகிதங்களை இரட்டித்து, அதன் மூலம் 24 லட்சம் ரூபாய் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. குதிரைப் பந்தய முறையை ஒழிக்கவேண்டுமென்று மக்கள் கூறிக்கொண்டிருக்கிறார்கள். மது விலக்குத் திட்டம் வந்த காரணத்தால், மது ஒழிக்கப்பட்டது. கலால் வரி மூலம் கிடைத்து வந்த 17 கோடி ரூபாயை இழந்து அந்தத் தீய செயலை நாட்டிலிருந்து ஒழித்து விட்டோம் என்ற பெருமை பெற்றிருக்கிற இந்த சர்க்கார் குதிரைப் பந்தயத்தையும் ஒழித்து, அதனால் கிடைக்கின்ற சொற்ப வருமானத்தை இழக்கத் தயாராயிருக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

இறுதியாக, இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில், மக்களுடைய வாழ்க்கையை அரித்துக்கொண்டிருக்கிற விலைவாசி உயர்வுப் பிரச்சினையைப் பற்றி அமைச்சர் அவர்கள் எதுவுமே குறிப்பிடாதது மிகவும் வருந்தத்தக்கது. விலைவாசி ஏற்றத்தின் காரணமாகத்தான் பொருளாதாரத் துறை பாதிக்கப்பட்டிருக்கிறது; பொருளாதார வளர்ச்சி குன்றிக் கிடக்கிறது. நம்முடைய திட்டங்களின் முன்னேற்றம் பாதிக்கப்படுகிறது, என்று பழைய நிதி அமைச்சர் கூறியிருக்கிறார். அதைப் புதிய நிதி அமைச்சர் கவனிப்பாரா என்று கேட்டுக்கொண்டு, இந்த விவாதத்தில் என்னுடைய கருத்தை இந்த அளவில் முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜே. மாதா கவுடர்:** கனம் சபாநாயகர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் 1962-63-ஆம் ஆண்டினுடைய திருத்தப்பட்ட நிதி நிலை அறிக்கையை வரவேற்று எனது கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆண்டுக்கான திருத்தப்பட்ட நிதி நிலை அறிக்கை இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இந்த நேரத்தில், புதிய வரிகள் போட இருப்பதைப் பற்றி எதிர்க் கட்சியிலே இருக்கும் அங்கத்தினர்கள் மாறுபட்ட கருத்துக்களை எடுத்துச் சொல்ல முன்வரலாம். ஆனால், இந்த வரியினால் யாருக்குத் தொல்லைகள் ஏற்படும் என்பதைப்பற்றி அவர்கள் குறிப்பிடும் நேரத்தில் பஸ் முதலாளிகளுக்கு வரி என்று விதித்திருந்தாலும், மறைமுகமாக அது மக்களைத்தான் சாரும் என்று அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இது பழைய பல்லவி. கடந்த ஐந்தாண்டு காலமாக இதே பாட்டைத்தான் எதிர்கட்சிக்காரர்கள் பாடிக்கொண்டிருக்கிறார்கள். எனக்கு முன்பு பேசிய திரு. கருணாநிதி அவர்களும் ஐந்தாண்டு காலமாக இதே பல்லவியைத்தான் பாடிக்கொண்டிருந்தார்கள். 9-30 a.m.